தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1979 பிப்ரவரி 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

அம்பத்தூர் நகரியம்.

*குறுகிய கால வினா எண் 3 —திரு. க. சுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் நகரியத்தை நகராட்சியாக மாற்றக் கோரி அனைத்துக் கட்சிகளின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டு இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) அண்டு (ஆ) :— இல்லை. ஆயினும் அம்பத்தூரில் உள்ள சில சங்கங்களிலிருந்து கோரிக்கைகள் வரப்பெற்று நகராட்சிகளின் ஆய்வாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் நகரியம் ஒரு இலட்சத்திற்குமேல் மக்கள் தொகை கொண்டது; ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடிக்கு மேல் வருமானம் வரக் கூடிய ஒரு நகரியம். இதிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் தகராறு வருகிறது. அதிலும் கட்சிக்காரர்களுக்குள்ளேயே தகராறு இருக்கிறது. ஏற்கெனவே ரோடு வசதி, லைட் வசதி, குடிநீர் வசதி இல்லை. வடிகால் வாரியத்திற்கு பணம் பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டும், எந்தவிதமான வசதியும் இதுவரை செய்து தரப்படவில்லை. இதன் காரணமாக அரசாங்கமே இதை நகராட்சியாக மாற்றுவதற்கு, அதிலும் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், நகராட்சியாக மாற்றுவதை ஒரு சாதனையாக சொல்லியிருக்கிறார்கள். இவர்களுடைய சாதனை அவர்களுடைய வேதனையாக இருக்கிறது, அந்த வகையிலே இந்த அம்பத்தூரை பொறுத்த மட்டில் ஒரு நகராட்சியாக மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 பிப்ரவரி 23

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதனுடைய வரலாறு சுப்பு அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். முதலில் அது நகராட்சியாக இருந்து, அதற்குப் பிறகு நகரியமாக மாற்றப்பட்டது. தொழிலகங்களுடைய கோரிக்கைக்கு இணங்க அது நகரியமாக மாற்றப்பட்டது. இப்போது சுப்பு அவர்கள் சொல்கிற கருத்தை, மாறுபட்ட கருத்தாக இந்த அரசு கருதவில்லை. எனவே, நியாயமான இந்த கோரிக்கையை நிச்சயம் அரசு கவனிக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பொதுவாகவே நகரியமாக உள்ள பகுதிகளை நகராட்சியாக மாற்றுவதற்கு அரசுக்கு என்ன சங்கடம் இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எந்தச் சங்கடமும் இல்லை. தொழிலகங்கள் நகரியமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலும், சில சுற்றுலாப் பகுதிகள் நகரியமாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலும் இப்படி அமைக்கப்படுகின்றது. ஏற்கெனவே அம்பத்தூர் நகரியமாக இருப்பதைப்போல், கொடைக்கானலையும் நகரியமாக மாற்ற வேண்டுமென்று சில தொழில் அதிபர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சில நகரியப் பகுதிகள் அதாவது மணிமுத்தாறு நகரியமாக இருந்தாலும் சரி, தாளையூத்து நகரியமாக இருந்தாலும் சரி, அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல், அங்குள்ள தொழிலதிபர்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். ஆகவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை வைத்து, இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் எல்லா நகரியங்களையும், நகராட்சிகளாக ஆக்கவோ அல்லது டவுன் பஞ்சாயத்துக்களாக ஆக்கவோ நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எல்லா நகரியங்களையும் நகராட்சிகளாக மாற்றும் உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, சில தொழிலகங்கள் இதை நகராட்சியாக இருப்பதை ஆட்சேபிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதனால் அவர்களுக்கு என்ன நஷ்டம் என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அரசே நேரடியான பணிகளில் இந்த நகரியங்களில் ஈடுபடுவது இதற்கு ஒரு காரணம்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, அம்பத்தூர் முதலில் நகராட்சியாக இருந்து, பின்னர் சிலருடைய வேண்டு கோளுக்கிணங்க நகரியமாக மாற்றப்பட்டதாகக் கருதுகிறேன். மீண்டும் மக்களுடைய கோரிக்கையே மகேசன் கோரிக்கை என்ற அடிப்படையில், அதை நகராட்சியாக மாற்றுவதற்கு துரித நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அம்பத்தூர் நகராட்சியாக இருந்தது, நகரியமாக மாற்றப் பட்டது என்பது தொழிலகங்களுடைய வேண்டுகோளுக்கு மட்டு மல்ல. சட்டப் பேரவையிலும், சட்ட மேலவையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இப்படி மாற்றப்பட்டது என்ற ஒரு குறிப்பும் இருக்கிறது. ஆனால், இப்போது மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில், அங்கே இருக்கின்ற கட்சி களின் கருத்துக்களையும் அறிந்து, அதைப்பற்றி நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு சேமிப்பு நிதி வசூல்.

*வினா எண். 138—

திரு. கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சிறு சேமிப்பு நிதி, கிராம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களில் இருந்து வற்புறுத்தி அவற்றின் சேமிப்பு நிதியி லிருந்து திரட்டப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், நிதி இலாக்காவின் யோசனைப்படி இப்படி செய்யப்படுகிறதா?

(இ) இப்படி நிதி திரட்ட பள்ளி ஆசிரியர்கள் பயன்படுத் தப்படுகிறார்களா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

(இ) இல்லை.